# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம்,**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திருமதி.K உமாராணி, B.E.,**

ந.க.எண்.545/2022/விமா2

நாள்.10.08.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி வட்டம் – விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் – அய்யூர் அகரம் ஊராட்சி மற்றும் கிராமம் – சர்வே எண்கள். 249/1C, 249/2A, 249/3A –ல் 0.82 ஏக்கர் (அ) 3350.00 ச.மீ – பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் – வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1) மனுதாரர் திரு.R. புகழேந்தி, சிந்தாமணி, விழுப்புரம், அவர்களின் விண்ணப்பம் நாள். 06.04.2022 (Online Application No.202205301012377/dt.. 02.04.2022
2) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.545/2022/ நாள்.03.06.2022
3) அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை (நிலை எண்.16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
5) மனுதாரர் திரு.R. புகழேந்தி, சிந்தாமணி கிராமம், விழுப்புரம், அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள்/ நாள்.14.07.2022
6) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004
7) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017
8) அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் UD4(3) துறை நாள். 23.09.2020
9) அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 09.12.2020
10) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.30.08.2017.

11) நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/ LA1, நாள். 08.09.2017

12) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/TCP2, நாள். 14.08.2021.

13) வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அவர்கள் கடித எண்.1689/UD4(1)/2022-1, நாள்.02.02.2022.

14) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.25.07.2022 (நன்னிலை வரி கட்டணம், மற்றும் கொடிநாள் நிதி வங்கி வரவோலை, அஞ்சலக தேசிய சிறுசேமிப்பு பத்திரம் செலுத்துக் கோரியது)

15) மனுதாரர் நன்னிலை வரி கட்டணம், மற்றும் கொடிநாள் நிதி வங்கி வரவோலை, அஞ்சலக தேசிய சிறுசேமிப்பு பத்திரம் செலுத்தி விவரம் பெறப்பட்ட நாள்.29.07.2022.

------

1) பார்வை (1)- சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) -ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.03.06.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (5)-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக, தானபத்திர எண்.3692/2022/ நாள்.12.07.2022-உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திர அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>**ம.வ/ந.ஊ.உ.இ.(வி.மா)எண்.48/2022**</u> என எண்ணிடப்பட்டு மூன்று அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயல் ஆணை கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1) (a) பார்வை (10)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (8)-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன் படியும் மாநகராட்சி/ நகராட்சி பகுதி எனில் 'Collecting the necessary fees including the charges for proving amenities like roads strm water drains and street lights from the applicants ' necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b) மாநகராட்சி/அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provideother amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT provide necessary street lights etc., as per the standards specified by the Local Body."

2) (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது, ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அராசணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகள் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3) பார்வை (10) மற்றும் (11)-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண். உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4) The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority- ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5) பார்வை (7)-ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லா பகுதி/ திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000 ஐயும் மற்றும் திட்டமில்லா பகுதியில் அமையும் மனையிடத்திற்கு விதி எண்.9ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன் மாற்ற கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் கீழ்காணும் அரசு கணக்குத் தலைப்பின் கீழ் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**Head of Account: (Land use Conversion Charge)**

0217 Urban Development – 60
Other Urban Development Schemes 800
Other Receipts–AS Receipts Under
Land use conversion charges –27
Non Taxation fees – 09 collections.
DPC: 0217–60–800–AS – 22709.

பார்வை (3)-ல் காணும் அரசாணைகளின்படியான தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளின்படி, பொது ஒதுக்கீட்டிற்கான தொகையினை நில வழிகாட்டு மதிப்பீட்டின்படி 1 ச.மீ-க்கு ரூ.109.30/- வீதம் 100.00 ச.மீ-க்கு தொகை ரூ.12,000/-(ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) உரிய அரசு கணக்கில் மனுதாரரால் WWW.Karuvoolam,tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை (6)-ல் காண் அரசாணையின்படி இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (15)-ல் கண்ட மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.6,000/-(ரூபாய் ஆறாயிரம் மட்டும்) WWW.Karuvoolam, tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக SBI. விழுப்புரம் கிளையில் செலுத்தப்பட்டு நாள்.27.07.2022-ன் நகல் பெறப்பட்டுள்ளது.

மனுதாரர் கொடி நாள் நிதிக்காக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) In favour of Armed Force Flag day fund, Payable at Villupuram என்ற பெயரில் பெறப்பட்ட (Demand Draft No.482829) அசல் நாள்.27.07.2022 மற்றும் மனுதாரர் பெயரில் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-க்கு சிறுசேமிப்பு பத்திரம் நாள்.28.07.2022-ன் நகல் பெறப்பட்டுள்ளது.

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதலுக்கு, ஊராட்சி மன்றத் தலைவர், அய்யூர் அகரம் ஊராட்சி, அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

ஊராட்சி மன்றத் தலைவர், அய்யூர் அகரம் ஊராட்சி, அவர்கள் மனுதாரருக்கு உத்தரவு வழங்குமாறும் அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விழுப்புரம்.

10/08/22

10.8.22

இணைப்பு

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(3 தொகுப்பு மற்றும் தானபத்திர
எண்.3692/2022, 16-தாள்களை கொண்டது)

பெறுநர்,

ஊராட்சி மன்றத் தலைவர்,
அய்யூர் அகரம் ஊராட்சி,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம்.

நகல் :

1) திரு. R. புகழேந்தி,
த/பெ. ரங்கராஜன்,
எண்.6/800, மேட்டுத் தெரு,
அய்யூர் அகரம்,
சிந்தாமணி,
விழுப்புரம் மாவட்டம்.
2) வட்டாட்சியர்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.
3) உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
விழுப்புரம் மாவட்டம்.
4) Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.1A. 1st Street, Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai-600 008.
5) இருப்பு கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)
6) கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிபம் -1)

# அய்யூர்அகரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை. திருமதி. P.வாசுகி

கடித எண்: 1/2022

நாள் : 26-08-2022

பொருள்:- மனைப்பிரிவு விக்கிரவாண்டி ஒன்றியம் அய்யூர்அகரம் ஊராட்சி சிந்தாமணி கிராமம் சர்வே எண்கள். 249/1C, 249/2A, 249/3A ஆகியவற்றில் 0.82 ஏக்கர் (அல்லது) 3350.00 ச.மீ. பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் சார்பு.

பார்வை:- 1.அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD (3) நாள்: 23.09.2020

2.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் அவர்களின் ந.க. எண். 545/2022, விமா2/, நாள் 10.08.2022.

3.அய்யூர்அகரம் ஊராட்சி தீர்மான எண். 75, நாள்: 26.08.2022

4. தானப்பத்திரம் எண். 3692/2022 நாள்: 12.07.2022

5. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, விழுப்புரம் வங்கி கருவூல செலுத்திச்சீட்டு (இணையதளம் வாயிலாக)

நாள்: 27.07.2022

உத்தரவு:

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் அய்யூர்அகரம் ஊராட்சி சிந்தாமணி கிராமம் மனைப்பிரிவு சர்வே எண்கள். 249/1C, 249/2A, 249/3A ஆகியவற்றில் 0.82 ஏக்கர் (அல்லது) 3350.00 ச.மீ. பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்திட பார்வை 1-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படியும், பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 3 (ம) 4-ல் காணும் ஊராட்சியின் தீர்மானம் மற்றும் தானப்பத்திரம், மனை அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடித்தத்தில் தெரிவித்தள்ளார்.

பார்வை 5-ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3 % தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்கண்டான கட்டணமாக ரூ. 1000/- இந்தியன் வங்கியில் செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசு தலைப்பு 021760800 AS 22709

| வ.எண் | விஸ்தீர்ணம் | சந்தை மொத்த மதிப்பு (ஏக்கரில்) | 3 % நிலமாற்று கட்டணம் |
|---|---|---|---|
| 1. | 0.82 ஏக்கர் அல்லது 3350 ச.மீ (1 ச.மீ வீதம் ரூ. 3350 (109.46 X 3350 ரூபாய். 3,66,690/-) | 3,66,690/- | 11000/- |

ரூ. 11000/- (ரூபாய். பதினொன்று ஆயிரம் மட்டும்)

செலுத்து சீட்டு எண்: 20220825015185 நாள்: 25.08.2022 இந்தியன் வங்கி சிந்தாமணி கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்:</u>

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானது என அறியப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
2. மனைப்பிரிவில் அமையும் மனையின் கட்டிடங்கள் கட்டவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெற வேண்டும் மேலும் நீர் நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனுமம் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்கவேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அய்யூர்அகரம் ஊராட்சி சிந்தாமணி கிராமம் மனைப்பிரிவு சர்வே எண்கள். 249/1C, 249/2A, 249/3A ஆகியவற்றில் 0.82 ஏக்கர் (அல்லது) 3350.00 ச.மீ. பரப்பளவில் அமைந்துள்ள 19 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

PRESIDENT, தலைவர்,
AYYUR AGARAM PANCHAYAT
அய்யூர்அகரம் ஊராட்சி

26/08/22

பெறுதல்:

திரு.இர.புகழேந்தி த.பெ. ரங்கநாதன்

கதவு எண்: 6/800, மேற்கு தெரு,

சிந்தாமணி கிராமம்,

அய்யூர்அகரம் ஊராட்சி,

விக்கிரவாண்டி ஒன்றியம்,

விழுப்புரம் மாவட்டம்.

நகல்:

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இணை சார்பதிவாளர் -II. சார்பதிவாளர் அலுவலகம், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், விக்கிரவாண்டி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
5. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), விக்கிரவாண்டி ஒன்றியம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate